280

EASTERN
UNIVERSITY, SRI LANKA.
EXAMINATION BRANCH
06 JAN 2014
VANTHARUMOOLAI,
CHENKALADY.

# "தென்மோடிக்கூத்து ஆடை அணிகலன்களின் மீள்கட்டமைப்பு: "கண்டியரசன்" வரலாற்றுக்கூத்தை அடிப்படையாகக்கொண்ட ஓர் ஆய்வு"

செல்வி. இரவீந்திரதேவா சுபோஜினி

பதிவு இலக்கம்:- EU/IS/2007/AC/214

சுட்டெண்:-CS3214

FAC280
Project Report
Library - EUSL

நுண்கலைத்துறை

கலைகலாசாரபீடம்

கிழக்கு பல்கலைகழகம்

வந்தாறுமூலை

இலங்கை

2013.

PROCESSED
Main Library, EUSL

# முன்னுரை

கூத்து ஈழத்தமிழர்களின் பாரம்பரிய கலைவடிவமாகும். அதை அடையாளப்படுத்துவதில் அதன் பாரம்பரிய ஆடை அணிகள் முக்கியத்துவம் வகிக்கின்றன. நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்கள் பாடப்புத்தகங்களின்முலம் வடமோடி, தென்மோடிக்கூத்திற்குரிய பாரம்பரிய ஆடைஅணிகளை, அவற்றின் வடிவத்தை அறிந்துகொள்கின்றனரேதவிர நேரடியாக பார்வையிட்டு செயன்முறைக்கற்கைமூலம் அறிந்துகொள்ள முடிவதில்லை. கூத்திற்கு பயன்படுத்தப்படும் ஆடைஅணிகள் பல்வேறு காரணங்களால் நவீனத்துவ மாற்றமடைந்துவருகின்றமையும் இதற்குஒருகாரணமாகும்.

கூத்தின் பாரம்பரிய ஆடைஅணிகள் மோடிக்கேற்ப சில வேறுபாடுகளைக்கொண்டு காணப்படுகின்றபோதிலும் சமகாலத்தில் சினிமாவின் தாக்கம், பொருளாதார பிரச்சனைகள் போன்றவற்றின்முலம் கூத்திற்குரிய ஆடைஅணிகலன்கள் உருமாற்றமடைந்துவருவதால் வடமோடி, தென்மோடி ஆகிய இருமோடிக்கும் ஒரே ஆடைஅணிகளே பயன்படுத்தப்பட்டுவருகின்றன. கூத்தின் பாரம்பரிய ஆடைஅணிகள் சுதேச அரங்கின் தனித்துவமான அடையாளத்தை வெளிப்படுத்துவதோடு பிரம்மாண்ட தன்மையுடையதாகவும், பாத்திரத்தின் தன்மை,மோடிக்கேற்ற வேறுபாடுகளை உவ்ளடக்கியதாகவும் இருக்கின்றது. எனவே கூத்தின் பாரம்பரிய ஆடை அணிகளின் பன்முகத்தன்மைகளை உணர்ந்து அதைப்பின்பற்றி எதிர்கால தலைமுறையினருக்கு அவற்றை சரியானமுறையில் கையளிக்கவேண்டும் என்றசிந்தனை கூத்துக் கலைஞர்களிடம் மிகக்குறைவாகவே காணப்படுகிறது.

அதேபோன்று கூத்திற்குரிய ஆடைஅணிகள் கூத்தின் கதை, கதைநிகழ்ந்தகாலகட்டம், சூழல், பாத்திரங்களின் கலாச்சார, பண்பாட்டு, வரலாற்று பின்னணி போன்றவையும் பிரதிபலிப்பதாக அமைவது அவசியம். “கண்டியரசன்” தென்மோடிக்கூத்தில் தோன்றும் கண்டி இராச்சியத்தின் வரலாற்றில் இடம்பெற்ற பாத்திரங்களுக்கு புராண, இதிகாச கதைகளில் தோன்றும் பாத்திரங்களிற்குரிய ஆடைஅணிகள் பொருத்தப்பாடுடையதா? என்பது கேள்விக்குரியது.

எனவே தென்மோடிக்கூத்தின் பாரம்பரிய ஆடைஅணிகலன்களைப்பற்றி பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களையும் கண்டி இராச்சியத்தின் இறுதிமன்னன் ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கன் உட்பட ஏனைய கதைமாந்தர்கள் வரலாற்றில் அணிந்திருந்த ஆடை அணிகலன்களைப்பற்றி பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களையும் அடிப்படையாககொண்டு கூத்தின் பாரம்பரிய அடையாளமும்,

பாத்திரங்களின் வரலாற்று பின்னணியும் தென்படும்வகையில் "கண்டியரசன்" தென்மோடிக்கூத்திற்கான ஆடை அணிகளை மீள்கட்டமைத்து வரைபடங்களில் வடிவமைப்புச்செய்துள்ளேன்.

இவை செயற்பாடுகளாக செய்யப்படுவதோடு செயல்நிலையில் இதற்குரிய சாதகபாதகவிடயங்கள் ஆராயப்பட்டு அதற்குரிய பொருத்தமானவகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

ஆய்வாளர்

# பொருளடக்கம்

நன்றியுரை

உறுதியுரை

முன்னுரை

அத்தியாயம் 01

பாரம்பரிய கூத்து ஆடை அணிகலன்களின் முக்கியத்துவம்..........01-18

1.1 கூத்து ஓர் அறிமுகம்

1.2 வடமோடி தென்மோடி கூத்துகளும் ஆடை அணிகலன்களும்.

1.3 கூத்தில் ஆடை அணிகலன்களின் முக்கியத்துவம்.

அத்தியாயம் - 02

"கண்டியரசன்" தென்மோடிக் கூத்திற்கான ஆடை அணிகலன்கள்

.............19-34

2.1 ஆரம்ப காலத்தில் அணியப்பட்ட ஆடை அணிகலன்கள்

2.2 சமகாலத்தில் கிராமங்களில் அணியப்படுகின்ற ஆடை அணிகலன்ககள்.

2.3 பல்கலைக்கழக மாணவர்களால் அணியப்பட்ட ஆடை அணிகலன்கள்.

அத்தியாயம் - 03

"கண்டியரசன்" கூத்திற்காக பல்கலைக்கழக மாணவர்களால் அணியப்பட்ட ஆடை அணிகலன்கள் சார்ந்து ஆய்வாளரது மனப்பதிவுகள். ..................35-50

3.1 பாத்திரங்களின் வேறுபாடு – ஆடை அணிகலன்கள் இவற்றுக்கிடையிலான தொடர்பு சார்ந்த மனப்பதிவு

3.2 பாரம்பரியமாக கூத்திற்க அணியப்பட்ட ஆடை அணிகலன்கள் சார்ந்த மனப்பதிவு

3.3 கதைமாந்தர்களின் வரலாற்றுப் பின்னணிக்கும் கூத்தில்அணியப்பட்ட ஆடை அணிகலன்களுக்கும் இடையிலான பொருத்தப்பாடு சார்ந்த மனப்பதிவு.

அத்தியாயம் - 04

"கண்டியரசன்" தென்மோடிக் கூத்திற்கான ஆடை அணிகல மீள்கட்டமைப்பில் ஏற்பட்ட சவால்களும் ஊக்குவிப்புகளும் ........51-68

4.1 மீள்கட்டமைக்கும் போது ஏற்பட்ட சவால்களும் சிக்கல்களும்.

4.2 மீள்கட்டமைப்பு சார்ந்து கூத்துக்கலைஞர்களின் கருத்துக்களும் ஊக்குவிப்புகளும்.

4.2.1 மு.கணபதிப்பிள்ளை.

4.2.2 வே.தம்பிமுத்து

4.2.3 வை.தேவராசா

4.2.4 பா.கமலநாதன்

அத்தியாயம் - 05

"கண்டியரசன்" கூத்திற்கான ஆடைஅணிகலன்களின் மீள்கட்டமைப்பு.

………………69-105

5.1 மீள்கட்டமைப்பிற்கு அடிப்படையாக அமைந்த ஆடை அணிகலன்களின் விபரங்களும், வரைபடங்களும்.

5.2 ஆடை அணிகலன்கள் மீள் கட்டமைக்கப்பட்ட விதம்.

5.3 மீள்கட்டமைக்கப்பட்ட ஆடை அணிகலன்களின் வரைபடங்கள்.

முடிவுரை

பின்னிணைப்பு

1. துணைநூற்பட்டியல்.
2. தகவல் தந்தோர் விபரம்.